<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No.3/2025</u>

<u>வழக்கு சாட்சி PW-1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துமாரி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சீனிவாசன் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 7th, 2026.

**(எதிரி ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி என்னுடைய கொழுந்தனார். எனது கணவர் பெயர் முருகன். எனக்கு 3 குழந்தைகள் உள்ளது. எனது கணவருடன் உடன் பிறந்தவர்கள் மொத்தம் 5 பேர். எதிரி என்னுடைய கணவரின் 2வது சகோதரர். நாங்கள் காந்திநகர் கீழ 4ம் தெருவில் குடியிருந்து வருகிறோம். எனது மாமானார் 5 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவர் இருக்கும்போதே பூர்விக சொத்துக்களை பிரித்துக்கொடுத்துவிட்டார். நாங்கள் குடியிருக்கும் வீடு மொத்தம் 1 1/2 சென்ட் அதில் எனது கொழுந்தன் குருராஜ் என்பவருக்கும், எங்களுக்கும் தலா 3/4 சென்ட் பிரித்து எனது மாமானார் எழுதிக்கொடுத்துவிட்டார். எதிரிக்கு தனியாக அவரது பங்கை வேறு இடத்தில் கொடுத்துவிட்டார். அதனால் எதிரி எங்களிடமும், எனது கொழுந்தன் குருராஜிடமும் அடிக்கடி சண்டை போட்டுவந்தார். 08.05.2024ம் தேதி எனது கணவர் வீட்டிற்கு வந்துவிட்டு சாப்பாடு வாங்குவதற்காக வெளியே போய்விட்டு சாப்பாடு

வாங்கிவிட்ட திரும்பி வீட்டிற்கு சுமார் இரவு 9.00 மணியளவில் வந்தபோது எதிரி எனது கணவரிடம் எனக்கும் பங்கு வேண்டும் என்று சண்டை போட்டார். அப்போது எனது கணவர் எதிரியிடம் உன்னுடைய பங்கை அப்பா உனக்கு கொடுத்துவிட்டார். அதனால் நாங்கள் குடியிருக்கும் 3/4 சென்டிலும் பங்கு கேட்டால் எப்படி தரமுடியும் என்று சொன்னார். அப்போது எதிரி சொத்தை கேட்டால் கொடுக்க மாட்டேங்கிறாய் நீ உயிருடன் இருந்தால்தான கொடுக்கமாட்டேங்கிற நீ செத்தால்தான் இடம் எனக்கு கிடைக்கும் என்று சொல்லி எதிரி அருவாளால் எனது கணவரின் மண்டையின் பின்புறமும், கழுத்திற்கு அருகிலும், வலது கண்ணிலும் வெட்டினார். எனது கணவருக்கு வலது கண் விழி வெளியே வந்தது. நாடியிலும், வாயிலும், மூக்கிலும் வெட்டினார். பற்கள் உடைந்தது. இடது கையில் நிறைய வெட்டுகள் வெட்டினார். இடது கை மணிக்கட்டியில் நிறைய வெட்டு வெட்டினார். இடது கை விரல்களிலும் வெட்டினார். இடது கை ஆட்காட்டி விரல் தற்போது மடக்க முடியவில்லை. சுண்டு விரலுக்கு இடையிலும் வெட்டினார். நானும், என்னுடைய மகள் மகாலட்சுமியும் தடுத்து பார்த்தோம். எதிரி என்னை பார்த்து தேவடியா என்று சொல்லி நீ தடுக்க வந்தால் உன்னை வெட்டுவேன் என்று சொல்லி விட்டு ஓடிவிட்டார். நாங்கள் சத்தம் போடவும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்தவுடன் எதிரி ஓடிவிட்டார். இந்த சம்பவத்தை நானும், என் மகள் மகாலட்சுமியும், எதிர்த்த வீட்டில் உள்ள மகேந்திரன் என்பவரும் பார்த்தோம். பின்னர் காயம்பட்ட எனது கணவரை சிகிச்சைக்காக சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். சங்கரன் கோவில் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசாரிடம் நடவடிக்கை எடுக்க நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து

என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படும் அருவாளை வைத்துதான் எதிரி எனது கணவரை வெட்டினார். அந்த அருவாள் அசாபொ.1 ஆகும். எனது கணவரை மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு போகச்சொன்னார்கள். எனது கணவர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மொத்தம் சுமார் 48 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.01.07 18:59:39 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No.3/2025</u>**
**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சங்கரன் | தொழில் | : | கொத்தனார் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 7th, 2026.

**(எதிரி ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் உடன் பிறந்த சகோதரர். அசா.1 முத்துமாரி எனது மனைவி. எனக்கு எதிரியை சேர்த்து இரண்டு தம்பி மற்றும் இரண்டு சகோதிரிகள் உள்ளனர். எனது அப்பா உயிருடன் இருக்கும்போதே எதிரிக்கு தனியாக இடத்தை வாங்கி அவர் பங்கை கொடுத்துவிட்டார். கழுகுமலை ரோட்டில் 1 1/2 சென்ட் இடத்தை எனக்கும், எனது தம்பி குருராஜ் என்பவருக்கும் சரிசமமாக எனது அப்பா பிரித்துக்கொடுத்துவிட்டார். அந்த இடத்திலும் எதிரி பங்கு கேட்டு அடிக்கடி எங்களிடம் தகராறு செய்து வந்தார். 08.05.2024ம் தேதி இரவு எனது பிள்ளைகளுக்கு சாப்பாடு வாங்கிவிட்டு சுமார் 8.30-9.00 மணியளவில் வீட்டிற்கு வந்து எனது இருசக்கர வாகனத்தை நிப்பாட்டி கொண்டிருந்தபோது எதிரி வந்து இடத்தில் தனக்கும் பங்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லி தகராறு செய்தார். அப்போது நான் எதிரியிடம் உனக்குதான் அப்பா தனியாக இடம் கொடுத்திருக்கார் என்று சொல்லும்

போது எதிரி என்னை பார்த்து நீ உயிருடன் இருந்தால் தானே இடம் கிடைக்காது என்று சொல்லி மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து என்னுடைய முகம், வலது கண்ணில் வெட்டினார். அதில் எனக்கு வலது கண் பார்வை போய்விட்டது. கழுத்திற்கு பின்புறமும், இடது கையிலும், இடது கை மணிக்கட்டிலும் மாறிமாறி வெட்டினார். ( சாட்சி கண்ணிலும், கையிலும், கழுத்திலும், முகத்திலும் ஏற்பட்ட காயத்தழும்பை காட்டினார். வலது கண், இடது கண்ணை போல் இல்லாமல் கண்விழிகள் பிதுங்கி உள்ளே போய் இருந்தது. வலது கண் பார்வை இல்லை என சாட்சி தெரிவித்தார். சில பற்கள் உடைந்தும், சில பற்கள் இல்லாமலும் இருந்ததை காண்பித்தார். ) அந்த சமயத்தில் எனது மனைவியும், எனது மகள் மகாலட்சுமியும் இருந்தார். அப்போது என் மனைவி எதிரி என்னை வெட்டும்போது தடுக்க வந்தார். எதிரி எனது மனைவியை பார்த்து தேவடியா என்று சொல்லி தடுக்க வந்தாள் உன்னையும் உனது மகளையும் சேர்த்து வெட்டுவேன் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார். நான் இரத்த வெள்ளத்தில் கீழே கிடந்தேன். எனது மனைவியும், எதிர் வீட்டில் குடியிருக்கும் நபரும் சேர்ந்து என்னை ஆம்புலன்ஸ் மூலமாக சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். எனது மனைவி என்னுடன் வந்தாள். நான் சங்கரன் கோவில் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு மேல் சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் அசாபொ.1 அருவாளை வைத்துதான் எதிரி என்னை வெட்டினார். பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் நான் சுமார் 1 1/2 மாதங்களாக சிகிச்சையில் இருந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனது மனைவி புகார் கொடுத்து என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.07 18:59:48 +0530